TNVR230046622024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

முன்னிலை - திரு. M. சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் திங்கள்கிழமை

O.S. No.1447/2024

(CNR – TNVR230046622024)

கனரா வங்கி,

தளவாய்புரம் கிளை,

அதன் கிளை மேலாளர் மூலம் ..... வாதி

//எதிர்//

M.தமிழ்ச்செல்வி ..... பிரதிவாதி

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 10.12.2024 தேதியன்று அ.வ.எண்.1447/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.03.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சௌந்தரராஜன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ..

தீர்ப்புரை

பிரதிவாதி வாதி வங்கிக்கு ரூ.3,82,758.25/- தொகையை ஆண்டுக்கு 10.60% வட்டியுடன், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து வழக்குத் தொடரப்பட்ட தேதி வரை திருப்பிச் செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்ககோரியும், வழக்கின் செலவு

தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த உத்தரவிடக்கோரியும், மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதி வங்கியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :-**

வாதி வங்கியானது, வங்கி நிறுவனங்கள் (நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் மற்றும் மாற்றுதல்) சட்டம் 5/1970-இன் விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியாகும். இது வங்கித் தொழில் செய்து வருகிறது மற்றும் இதன் தலைமை அலுவலகம் கர்நாடக மாநிலம், பெங்களூரு, எம்.ஜி. சாலை, 14, நவீன் வளாகத்தில் அமைந்துள்ளது. மேலும், தலவோய்புரத்தில் உள்ள கிளை உட்பட இந்தியா முழுவதும் கிளைகளைக் கொண்டு வங்கித் தொழில் செய்து வருகிறது. இந்த வழக்கில் வாதியானது, அதன் தலவோய்புரம் கிளையின் கிளை மேலாளர்/முதன்மை அதிகாரி மூலம் ஆஜராகிறது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ஆணை XXIX விதி 1-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மனுக்களில் கையொப்பமிடவும் சரிபார்க்கவும் தகுதி பெற்றவரும் அவரே ஆவார்.

ஆடை உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்காக, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு (MSES) கடன் பெறுவதற்காக பிரதிவாதி வாதியை அணுகினார். அவர் இந்தக் கடனுக்காக 28.02.2019 அன்று வாதியிடம் விண்ணப்பம் அளித்தார். பிரதிவாதி பின்வரும் ஆவணங்களை வாதிக்குச் சாதகமாக நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன், ரூ.4,50,000/- (நான்கு இலட்சம் மற்றும் ஐம்பதாயிரம் மட்டும்) கடன் தொகையை வழங்க வாதி ஒப்புக்கொண்டார். பிரதிவாதி இதற்கு

ஒப்புக்கொண்டு, பின்வரும் கடன் ஆவணங்களை வாதிக்குச் சாதகமாக நிறைவேற்றினார். பிரதிவாதியின் கடன் கணக்கு எண் 0902727021368 ஆகும்.

கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, வாதி பிரதிவாதிகளுக்கு ரூ.4,50,000/- கடன் தொகையை அனுமதித்திருந்தார். இந்தக் கடனுக்கான வட்டி விகிதம் தற்போது ஆண்டுக்கு 10.65% ஆகும், இது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டது. கடன் தொகையை 60 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

பிரதிவாதி, கடனைத் திருப்பிச் செலுத்தும் கால அட்டவணையில் ஒழுங்காகச் செயல்படவில்லை என்றும், தனது கணக்கை முறையாக இயக்கவில்லை என்றும், மேலும் 22.11.2024 அன்றுள்ள கணக்கு அறிக்கையின் நகலின்படி ரூ.3,82,758.25/- (மூலட்சம் எண்பத்திரண்டு ஆயிரம் எழுநூற்று ஐந்எட்டு இருபத்தைந்து பைசா) நிலுவைத் தொகையாக உள்ளது என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது. வாதியின் தொடர்ச்சியான கோரிக்கைகள் இருந்தபோதிலும், நிலுவையில் உள்ள தொகையைச் செலுத்த பிரதிவாதி ஏற்பாடு செய்யவில்லை. பிரதிவாதியின் கணக்கு, செயல்படாத சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வாதி 07.10.2024 அன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார், ஆனால் பிரதிவாதி எந்தப் பதிலும் அனுப்பவில்லை அல்லது வாதிக்கு எந்தத் தொகையையும் செலுத்தவில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட தொகையை, அதற்கான வட்டி மற்றும் வழக்குச் செலவுகளுடன் மீட்பதற்காக இந்த வழக்கைத் தாக்கல் செய்வதைத் தவிர வாதிக்கு வேறு வழியில்லை. பிரதிவாதி கடன் ஆவணங்களை முறையாகச் செயல்படுத்தியதாலும், 25.02.2021, 01.02.2022 ஆகிய தேதிகளில் கடன் ஒப்புகை

வழங்கப்பட்டதாலும், வழக்குக் கோரிக்கையின் எந்தப் பகுதியும் காலவரையறைச் சட்டத்தால் தடை செய்யப்படவில்லை.

பிரதிவாதியின் கடன் ஒரு கல்விக் கடன் என்பதால், கடன் நிவாரணச் சட்டங்கள் அல்லது விதிமுறைகளின் பலன்களைக் கோர பிரதிவாதிக்கு உரிமை இல்லை. தாவா தொகையை வசூலிக்க கோரி வாதி வங்கியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்</u>** :-

வாதியின் வழக்கு பொய்யானது, மோசடியானது, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல.

பிரதிவாதிகள் இந்த எதிர்வழக்குரையில் உண்மையென ஒப்புக்கொள்ளும் சில சங்கதிகளை தவிர மற்றவைகளை நிரூபணம் செய்ய வாதியே கடமைப்பட்டுள்ளார்.

வாதி அவரது வழக்குரை பத்தி எண்.4-ல் இந்த பிரதிவாதி அவர் பாரத்து வந்த கார்மெண்ட்ஸ் தொழிலை விரிவுபடுத்துவதற்காகவும் அதற்குரிய இயந்திர தடவாளங்களை வாங்குவதற்காகவும் வாதியின் வங்கியில் கடந்த 28.02.2019-ம் தேதி ரூ.4,50,000/-த்தினை வங்கி கடன் எண். 0902727021368-ன் படி பெற்றார் என்பது உண்மையே. மேற்படி கடனுக்கு ஆதரவாக பிரதிவாதிகள் 28.02.2019-ம் தேதி ஒரு கடன் ஒப்பந்த பத்திரத்தினை வாதியின் வங்கிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்ததாகவும், மேலும் அன்றைய தேதியில் பிரதிவாதிகள் வாதியின் வங்கிக்கு மேற்படி கடனை திரும்ப செலுத்தும் வகைக்கு ஒரு ஒப்புதல் கடிதத்தினை எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் சங்கதிகள் என்று இந்த பிரதிவாதிகள் தெரிவித்துக் கொள்கிறார்கள். மேற்படி சங்கதிகளை

வாதி வங்கியே தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

வாதியின் வழக்குரை பத்தி எண்.5, 6 மற்றும் 7-ல் உள்ள சங்கதிகள் அனைத்தும், இந்தியன் ரிசர்வ் வங்கி விதிகளுக்கு முரணான சங்கதிகள் என்று இந்த பிரதிவாதிகள் சமர்ப்பித்துக் கொள்கிறார்கள்.

வாதியின் வழக்குரை பத்தி எண்.8-ல் இந்த பிரதிவாதிகள் 22.11.2024-ம் தேதி கணக்கீட்டின் படி ரூ.3,82,758.25/-யை செலுத்த வேண்டுமென்று சொல்லியுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வாதியின் வங்கியானது அவ்வாறு கணக்கீடு செய்துள்ளது சட்டத்திற்கு முரணானது என்று இந்த பிரதிவாதிகள் சமர்ப்பித்துக் கொள்கிறார்கள்.

வாதி அவரது வழக்குரை பத்தி எண் 8-ல் இந்த பிரதிவாதி அவர் செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்தவில்லை என்று இந்த பிரதிவாதிக்கு வாதியின் வங்கியானது கடந்த 07.10.2024-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது உண்மையே. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதி வாதியின் வங்கியை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பியது போல் தங்களுக்கும் அனுப்பியுள்ளதாக தெரிவித்ததால் இந்த பிரதிவாதி வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அனுகியபோது வாதியின் வங்கியானது

உண்மையில் இந்த பிரதிவாதி வாதியின் வங்கியிடம் வாங்கிய கடன் தொகையான ரூ.4,50,000/-த்தினை திரும்ப செலுத்தும் வகைக்கு மாதம் ரூ.11,000/-வீதம் கடந்த 2020, பிப்ரவரி மாதம் வரை மொத்தம் 12 தவணைகள் செலுத்தி வந்தநிலையில் கொரோனா

பெருந்தொற்றின் காரணமாக நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கின் காரணமாக பிரதிவாதிக்கு தொழில் நஷ்டம் ஏற்பட்டதாலும் அவரது மாமியார் ரஞ்சிதத்திற்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவிற்கு பெரும் பொருட் செலவும், மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாலும் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தவணைகளை இந்த பிரதிவாதியால் செலுத்த இயலவில்லை.

வாதியின் வங்கியானது பிரதிவாதிகளுக்கு வழங்கிய கல்வி கடனை வசூல் செய்ய சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இந்த வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யாமல் அசட்டையாக இருந்துவிட்டு காலம் கடந்து தற்போது தாக்கல் செய்துள்ளதால் வாதியின் வழக்கானது உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யவில்லை என்ற கோதாவில் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்று இந்த பிரதிவாதிகள் சமூகம் நீதிமன்றத்தார்ரை பணித்து கொள்கிறார்கள்.

இந்த பிரதிவாதிகள் இனிவரும் காலங்களில் ஒரு கூடுதல் எதிர்வழக்குரையை இதன்மூலம் நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். தாக்கல் செய்ய தனக்குரிய உரிமையை

வாதி வங்கி கோரியிருக்கும் வட்டி கணக்கீட்டு முறை, வட்டி சட்டம், பெருந்தொகை கடன் சட்டம் மற்றும் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 34-ன் படி, சட்டத்திற்கு மாறானது ஆகும். இந்த வாதியின் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. குறிப்பிட்டு இருக்கும் வழக்கு மூலமும் சரியானதும் அல்ல

எனவே, தாவா வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the plaintiff is entitled to recovery of Rs.3,82,758.10/- with subsequent interest at the rate of 10.65% per annum for Principal amount of Rs.4,50,000/- till the date of realisation of entire amount from the defendants?
2. To what other reliefs the plaintiff entitled to?

5) வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 10 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>எழுவினா 1 க்கான தீர்வு :-</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், வாதி வங்கி தளவாய்புரம் கிராமம், பெங்களூரை தலைமையிடமாக கொண்டு கிளை அமைத்து செயல்பட்டுவருகிறது. கடந்த 28.02.2019 அன்று பிரதிவாதி வாதி வங்கியை அணுகி பிரதிவாதி செய்து வரும் கார்மெண்ட் தொழிலுக்கு மெஷினிரி வாங்குவதற்காக ரூ.4,50,000/- கடன் வழங்கவேண்டுமென்று கடன் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அதன் பேரில் கடன் ஒப்பந்தமும் கொதுவை ஒப்பந்தமும் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதன் பேரில் வாதியின் வங்கி கடன் அனுமதி கொடுத்து அன்றைய தினமே உறுதிமொழி கடிதம் பிரதிவாதி வங்கியால் எழுதிக்கொடுக்கப்பட்டு வாதி வங்கியால் பிரதிவாதிக்கு ரூ.4,50,000/- கடன் வழங்கியுள்ளது. மேற்படி கடனுக்கான 25.02.2021 அன்றும், 01.02.2022 அன்றும் மேற்படி கடனை குறிப்பிட்டு ஒப்புகை சீட்டு எழுதிக்கொடுத்ததன் பேரில் கடன் புதுப்பித்து வந்துள்ளது. இந்நிலையில், பிரதிவாதி மேற்படி கடன் தொகைக்காக செலுத்த வேண்டிய தவணை தொகையை செலுத்ததால்

தொகை வசூலிக்க கோரி வாதி வங்கி பிரதிவாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்களிலிருந்து பிரதிவாதி வாதி வங்கியில் கடன் பெற்றதையும் மேற்படி கடனுக்காக கடன் ஒப்பந்தம், கடன் விண்ணப்பம், கொதுவை ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த கோரி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், கடனை திரும்ப செலுத்தவில்லை என்றும், பிரதிவாதியே தனது சாட்சியத்தில் கடன் வாங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், எனவே வாதி கோரிய படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று வாதுரை செய்தார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, வாதியின் வழக்கு மறுக்கப்படுகிறது என்றும், வழக்கில் கண்டுள்ள கணக்கு விபரப்பட்டியல் தவறானது என்றும், கொரோனா காலம் வரை பிரதிவாதி கடன் திருப்பி செலுத்தியுள்ளார் என்றும், அதன் பிறகு தொழில் நஷ்டம் ஏற்பட்டதால் தவணை தொகை செலுத்த முடியவில்லை என்றும், வாதி கோரியுள்ள தொகை அதிகப்படியானது என்றும், எனவே, வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதுரை செய்தார்.

ஆவணங்களை பரிசீலினை செய்ததில், வா.சா.ஆ.1ன் படி 28.02.2019 அன்று ரூ.4,00,000/- தொழிலுக்காக கடன் வழங்கவேண்டுமென்று பிரதிவாதி விண்ணப்பம் செய்துள்ளார். அதன் பேரில் வா.சா.ஆ.2, 3 ன் படி 28.02.2019 அன்று அதன் பேரில் கடன்

ஒப்பந்தமும், கொதுவை ஒப்பந்தமும் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். அதன் பின்பு 28.02.2019 அன்று கடன் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பிரதிவாதியால் வா.சா.ஆ.5, 6 கடனுறுதி மொழி கடிதமும், கடன் அனுமதி கடிதமும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதி வங்கிக்கு பிரதிவாதி தவணை தொகை செலுத்ததால் கடன் நீட்டிக்க கோரி வா.சா.ஆ.7, 8 ன் படி கடன் புதுப்பித்தல் கடிதம் எழுதிக்கொடுத்து பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தவில்லை. வாதி வங்கி மேலாளர் வா.சா.ஆ.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் 10 வரை ஆவணங்களிலிருந்து, பிரதிவாதி வாதி வங்கிக்கு தொகையை செலுத்தவில்லை என்பது தெரியவருகிறது.

பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் " நான் வாதி வங்கியில் கடன் வாங்கும்போது கையொப்பம் செய்து கொடுத்த ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கடன் வாங்கும் போது எத்தனை சதவிகிதம் வட்டி என தெரிந்து தான் கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் கடன் வாங்கியதிலிருந்து தவணை தொகையை தவறாமல் செலுத்தவில்லை என்றால் முதல் வருடம் தவணை தொகையை தவறாமல் கட்டினேன் அதன் பின்பு கட்டவில்லை " என்றும்,

" பி.வா.சா.ஆ.2 ல் கண்ட தொகைகள் என்னுடைய கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் " என்று ஒப்புக்கொண்டே சாட்சியம் அளித்துள்ளார்.

ஆக வா.சா.1 சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் 10 வரை ஆவணங்களிலிருந்தும், பிரதிவாதியின் குறுக்கு விசாரணையிலிருந்தும், வாதியின் வழக்கு

நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதி கோரும் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினா வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

7) <u>எழுவினா 2 க்கான தீர்வு</u>

எழுவினா 1 வாதிக்கு ஆதரவாக விடை காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது.

8) முடிவில்,

1) வழக்கு செலவுதொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) வாதி வங்கிக்கு, பிரதிவாதி ரூ.3,82,758.25/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 01ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

வா.சா.1 - அருண்மொழி (கிளை மேலாளர்)

<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>:-

வா.சா.ஆ.1	-	28.02.2019	கடன் விண்ணப்பம் அசல்
வா.சா.ஆ.2	-	28.02.2019	கடன் ஒப்பந்தம் அசல்

வா.சா.ஆ.3	-	28.02.2019	கொதுவை ஒப்பந்தம் அசல்
வா.சா.ஆ.4	-	27.02.2019	கடன் அனுமதி கடிதம் அசல்
வா.சா.ஆ.5	-	28.02.2019	கடன் உறுதி மொழி கடிதம் அசல்
வா.சா.ஆ.6	-	28.02.2019	கடன் அனுமதி மெமோரண்டம் அசல்
வா.சா.ஆ.7	-	25.02.2019	ரூ4,11,968/க்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடன் ஒப்பந்த கடிதம் அசல்
வா.சா.ஆ.8	-	01.02.2022	ரூ4,47,725.00 க்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடன் ஒப்புகை கடிதம் அசல்
வா.சா.ஆ.9	-	07.10.2024	வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்
வா.சா.ஆ.10	-	22.11.2024	பிரதிவாதியின் கணக்கு நகல் கணினி நகல்

<u>பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>:-

பி.வா.சா.1 - தமிழ்செல்வி

<u>பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>:-

பி.வா.சா.ஆ.1	-	28.02.2019	எனது வங்கி கணக்கிலிருந்து கடன் தொகை வரவு வைத்த விபரத்திற்கு Account statement -- ஒப்பீட்டு நகல் --
பி.வா.சா.ஆ.2	-	28.02.2019 முதல் 24.04.2023	நான் கடன் தொகையை வங்கியில் செலுத்தியதற்கான வங்கி செலான் (எண்ணம் -8) – அசல் மற்றும் நகல்

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.